# பெறுபேறுகள் முகாமைக்கான செயன்முறை



1 ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறுகை



2 விளையாட்டு வீரருக்கான அறிவித்தல்



3 முதற்கட்ட விசாரணை



4 B - மாதிரி பகுப்பாய்வு (விளையாட்டு வீரரால் கோரப்பட்டால்)



5 ஒழுக்காற்று விசாரணை (தடைவிதிப்பு)

மேன்முறையீட்டு விசாரணை (கோரப்பட்டால்)



6 விளையாட்டுத்துறை நடுத்தீர்ப்பு நீதிமன்றம் (விளையாட்டு வீரரால் கோரப்பட்டால்)

இங்கு தரப்பட்டுள்ள தகவல்களுக்கும் உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சட்டக்கோவைக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து, சட்டக்கோவையே செல்லுபடியாகும். இத்தகவலானது எந்நேரத்திலும் மாற்றத்திற்குட்படக்கூடியது. எப்போதும் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை, சர்வதேச சம்மேளனம், அல்லது தேசிய சம்மேளனம் போன்றவற்றுடன் புதுப்பிக்கப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிமுறைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.


## இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

**இல.363 /12, சுகததாச விளையாட்டரங்கு - ப்ளொக் டீ,**
**ஸ்டேடியம் பாரக்கிங் ரோட்,**
**சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.**

மின்னஞ்சல் முகவரி : **sladasl@yahoo.com**
அலுவலக தொடர்பிலக்கம் : **0112 328 366, 0112 328 367, 0113 071 838**
தொலைநகல் : **0112 328 370**
விசேட முறைப்பாடுகள் பிரிவு : **070 422 0422**

AntiDoping SriLanka/ SLADA Education   slada_official   Sri Lanka Anti-Doping Agency


Find out more at wada-ama.org

At-a-Glance

# பெறுபேறுகள் முகாமை

(Results Management)




With the Support of the Fund for the Elimination of Doping in Sport

unesco Anti-Doping Convention

SLADA

WORLD ANTI-DOPING AGENCY play true

# ISRM

## என்பது,

பெறுபேறுகள் முகாமைக்கான சர்வதேச தர நியமம் (ISRM) என்பது உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் உருவாக்கப்பட்ட ஒரு கட்டாயமாக்கப்பட்ட தர நியமமாகும்.




# தண்டனை விதிப்புகள் பற்றியது

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறுகைகளுக்கான தண்டனைகள் வாழ்நாள் தடை வரை இருக்கலாம்.

தகவின்மைக் காலமானது பின்வருவனவற்றைப் பொருத்து வேறுபடலாம்:

- ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறுகையின் வகை
- குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட காரணிகள்
- பயன்படுத்தப்பட்ட ஊக்குப்பதார்த்தத்தின் வகை அல்லது மாத்திரையளவு
- முன்பு மீறப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறுகையைத் தொடர்ந்து உங்களுக்கு விதிக்கப்பட்ட நேர்மறையான சோதனை அல்லது தடைவிதிப்பு தொடர்பான எந்தவொரு முடிவு தொடர்பாகவும் நியாயமான கேட்பு மற்றும் மேன்முறையீடு செய்வதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு.

# ADRVs?

## என்பது,

பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறுகைகளின் நிகழ்வு என வரையறுக்கப்படும்.



**01** தடைசெய்யப்பட்ட பதார்த்தம் அல்லது அதன் ஊன்மச்சிதைவுகள் அல்லது குறியீடுகள் விளையாட்டு வீரரின் மாதிரியில் காணப்படுதல்.

**02** விளையாட்டு வீரர் ஒருவரால் தடைசெய்யப்பட்ட பதார்த்தமொன்றை அல்லது தடைசெய்யப்பட்ட முறையொன்றை பயன்படுத்தல் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு எத்தனிக்கின்றமை.

**03** அறிவித்தலுக்குப் பின்னர் சிறுநீர்/ இரத்த மாதிரிச் சேகரிப்பை தட்டிக்கழித்தல் அல்லது உட்பட மறுத்தல்.

**04** விளையாட்டு வீரரொருவர் எங்குள்ளார் என்பதுபற்றிய தகவல்கள் சரியாக புதுப்பிக்கப்படாமை, அல்லது தவறான தகவல்களை கோப்பீடுதல் மற்றும் ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் பரிசோதனைகளை நடாத்துவதற்காக செல்லும்போது விளையாட்டு வீரர் குறித்த இடத்தில் இல்லாமை.

**05** ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக் கட்டுப்பாட்டின் ஏதேனும் பாகத்துடன் குறுக்கிடுகின்றமை அல்லது குறுக்கிடுவதற்கு எத்தனிக்கின்றமை.

**06** தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது முறையை உடைமையில் வைத்திருக்கின்றமை.

**07** தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தின் முகாமை, அல்லது முறையை விலைப்படுத்துகின்றமை அல்லது விலைப்படுத்துவதற்கு எத்தனிக்கின்றமை.

**08** தடைசெய்யப்பட்ட பதார்த்தத்தை அல்லது முறையை விளையாட்டு வீரரொருவருக்கு ஊட்டுகின்றமை அல்லது ஊட்டுவதற்கு எத்தனிக்கின்றமை.

**09** ஏதேனும் மீறுகைக்கு உதவுகின்றமை, அதனை ஊக்குவிக்கின்றமை, அதற்கு துணைபுரிகின்றமை, உடந்தையளிக்கின்றமை, சதிசெய்கின்றமை, அதனை மூடிமறைக்கின்றமை அல்லது அம்மீறுகையை அல்லது எத்தனிக்கப்பட்ட மீறுகையை உட்படுத்துகின்ற வேறேதேனும் வேண்டுமென்ற கூட்டுச்சதியைப் புரிகின்றமை.

**10** தடைக்குட்ட எவரேனும் ஒரு விளையாட்டு வீரரொருவர் அல்லது வேறு ஆளோடு பழகுகின்றமை.

**11** அதிகாரிகளுக்கு அறிக்கையிடுவதனை ஊக்கமிழக்கச்செய்வதற்கு அல்லது அதற்கெதிராகப் பழிவாங்குவதற்கான நடத்தை.